DVC No.5/2025 ம.சா.: 1 ஜீனத்பானு க/பெ.கலந்தர் அசாருதீன் நாள்: 07.03.2023

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் பொறியியல் மற்றும் பி.ஏ.இந்தி படித்துள்ளேன். எனது ஊர் அறந்தாங்கியாகும். எனது கணவர் அறந்தாங்கியை சேர்ந்தவர். திருமணத்திற்கு முன்பு எனது கணவரை எனக்கு தெரியாது. எனது திருமணம் எனது சம்மதத்துடனும், எதிர்மனுதாரர்கள் சம்மதத்துடனும் நடந்தது என்றால், சரிதான். திருமணத்திற்கு முன்பு எனது கணவரைப்பற்றியும், அவரது குடும்பத்தினரைபற்றியும் நன்கு விசாரித்துதான் தெரிந்துகொண்டேன் என்றால், சரிதான். ஆனால் அவர் வெளிநாட்டில் நிச்சயித்தபின்பு 1 1/4 வருடங்கள் கழித்துதான் வந்தார். மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். நான் திருமணமானவுடன் கூட்டுகுடும்பமாக இருந்தேன். 4ஆம் எதிர்மனுதாரர் நாத்தனார் ஆஃப்பிரினும் எங்களுடனேயே அருகில் வீடு இருந்தாலும் இருந்துவருவார்.

2) எனது கணவர் இருந்த வீடு வாடகை வீடாகும். அந்த வீட்டில் இரண்டு அறைகள் இருந்தது. நான் திருமணமாகி எனது கணவர் வீட்டிற்கு சென்றபோது அவர் வாடகை வீட்டில்தான் இருந்தார். எனது கணவர் நானும் ஒரே சமையல்தான் செய்து சாப்பிடுவோம். எனது திருமணத்தின்போது எனது மாமனாருக்கு வயது எனக்கு தெரியவில்லை. மாமியாருக்கு 47 வயதிருக்கும். எனக்கு உதவி தொகை சம்மந்தமாக சான்றிதழ் பெற வி.ஏ.ஓ. விடம் செல்லும் போதுதான் எனது கணவர் வயதினை குறைவாக சொல்லியிருக்கிறார் என்பதனை தெரிந்துகொண்டேன். அடுத்த நாள் திருமணம் என்பதாலும், திருமண பத்திரிக்கை ஏற்கனவே கொடுத்துவிட்டதாலும் திருமணம் செய்துகெண்டேன். மேற்சொன்ன விபரங்களை எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

3) எனது திருமணத்திற்கு முன்பே 4ஆம் எதிர்மனுதாரரான எனது நாத்தனாருக்கு திருமணமாகிவிட்டது. இரண்டு குழந்தைகள் இருந்தனர். எனது நாத்தனார் எனது வீட்டிற்கு அருகாமையில் உள்ள வீட்டில் வசித்து வந்தார்களா என்றால், ஆமாம். ஆனால் எனது வீட்டிலேயே அதிக நேரம் இருப்பார். எனது மாமனார், மாமியார் எனது நாத்தனார் வீட்டிற்கு போவதும், வருவதுமாக இருப்பார்களா என்றால், ஆமாம். அங்கேயும் இருப்பார்கள். எனக்கு திருமணம் நடைபெற்ற வருடம் 26.09.2021 ஆகும். திருமணத்திற்கு பின்னிட்டு எனது கணவர் இரண்டு மாதங்கள் என்னிடம் குடும்பம் நடத்தினார். திருமணத்திற்கு பின்பு நான் கருவுறவில்லை.

4) தற்சமயம் எனக்கு எனது கணவருடன் சேர்ந்து வாழ விருப்பமுள்ளதா என்றால், ஆமாம். தற்சமயம் நான் வேலை பார்க்கிறேனா என்றால், இல்லை. நான் எனது தாயார் வீட்டில்தான் இருக்கிறேன். சொந்த வீட்டில்தான் இருந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பும் நான் எந்த வேலைக்கும் சென்றதில்லை.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

**மறுவிசாரணை:**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**